கொடுக்க மாட்டோம் என்று மறுப்பு தெரிவிக்கிறார்கள். இவை களெல்லாம் இல்லாத வகையில் மாண்புமிகு அங்கத்தினர்களும் துணை செய்தால் விரைவில் எடுத்துக் கொடுக்க முடியும்.

முத்தூர் கிராம அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

*135 வினா—**திரு. மு. பழனிசாமி:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோயில் தொகுதி முத்தூர் கிராமம், ஊடையம் துத்திக் குளத்தில் உள்ள அரிசனங்கள் அண்மையில் வீட்டுமனை கேட்டு விண்ணப்பம் செய்துள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) விண்ணப்பம் ஏதும் வரவில்லை. எனினும் குறிப்பிட்ட கிராமத்தைச் சார்ந்த அரிசன மக்களுக்கு வீட்டுமனை அளிப்பதற்கு நில ஆர்ஜிதம் செய்வதற்கான பிரிவு 6 விளம்பர வரைவு 11—10—1972 தேதியில் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. ந. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தற்பொழுது அரிசன நலத்துறையில்தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மனைகள் வழங்கப்படுவது தொடர்ந்து நடைபெறுகிறதா அல்லது வேறொரு துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சந்தேகமே இல்லை, இந்தத் துறைதான் செய்துகொண்டு வருகிறது.

காரணி கிராம இருளர்களுக்கு வீட்டு வசதி

*136 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி துணை வட்டம், காரணி கிராமத்தில் இருளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தினை விரைந்து நிறைவேற்றி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

(இ) இது எப்போது நிறைவடையும் ?